

# புனித லூர்து மாதா தேவாலயம்

45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா
**பங்கின் குருவானவர்: அருள் தந். ரோபட் டேனியல்**
**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**
Tel: 05-5279349 Fax: 05-5276671
அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org



**திருத்தந்தையின் கருத்து** : **விசுவாசத்தைப் பரப்பிடுவதற்கான பணி: விசுவாசத்தைப்ப பரப்பிடும் பணியில் ஈடுபட்டுள்ள மக்கள், பண்பட்ட தங்களின் கலந்துரையாடலில், இக்கால சூழ்நிலைகளுக்கேற்ற ஒரு மொழியை கண்டடைய வேண்டுமென்று**

**டிசம்பர் மாத கரு** : **கிறிஸ்துவே இன்றியமையாதப் பரிசு**

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| டிச 30 ஞா | காலை 7.00<br>காலை 9.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம) | திருக்குடும்பம்<br>திருக்குடும்பம் |
| டிச 31 திங் | **மாலை 6.00**<br>**இரவு 8.00**<br>**இரவு 11.00** | **திருப்பலி (ஆ, த)**<br>**திருப்பலி (ஆ)**<br>**திருப்பலி (த)** | **திருப்பலி - ஆண்டு இறுதி சடங்கு இல்லை**<br>**ஆண்டு இறுதி சடங்கு தொடர்ந்து திருப்பலி**<br>**ஆண்டு இறுதி சடங்கு தொடர்ந்து திருப்பலி** |
| ஜன 1 செவ் | **காலை 9.00** | **திருப்பலி (ஆ, ம)** | **மரியாள் இறைவனின் தாய்** |
| ஜன 3 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | கிறிஸ்து பிறப்பின் வாரநாள் |
| ஜன 4 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | கிறிஸ்து பிறப்பின் வாரநாள் |
| ஜன 5 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | கிறிஸ்து பிறப்பின் வாரநாள் |
| ஜன 6 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 6.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம)<br>திருப்பலி (த) | ஆண்டவரின் திருக்காட்சி<br>ஆண்டவரின் திருக்காட்சி<br>அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம், ஜெலாப்பாங் |

## பங்கு நடவடிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| ஜன 3 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| ஜன 4 வெள் | மாலை 7.30 | ஆலயம் | பாடல்குழு (ஆ) |
| ஜன 5 சனி | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| ஜன 6 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மாலை 7.30 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஜெலாப்பாங் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய குழு கூட்டம் |

**2019 ஜனவரி மாத திருமணம்**

ஜன 19 மாலை 4.30 திருமணம் (த) நாரன்ஸ் த/பெ குப்பன் & எவலின் த/பெ சவரிமுத்து

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் அல்லது திருத்தொண்டரிடம் தெரிவியுங்கள்

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. நமது மனமார்ந்த நன்றிகள்:** கிறிஸ்துமஸின்போது கடினமாக உழைத்த பல்வேறு பணிக்குழுக்களுக்கும், பாடல்குழுவிற்கும் (தமிழ், ஆங்கிலம், சிற்றாலயகுழு), பஜனையாளர்களுக்கும், அனைத்து திருவழிபாட்டு குழுக்களுக்கும், குடிலை அலங்கரித்த தாசேக் சிற்றாலய / கிழக்கு திசை குழுவினருக்கும், ஒலிப்பெருக்கி பொறுப்பாளர்களுக்கும், கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை அர்த்தமுள்ளதாக்க முன்வந்து உதவிய மற்ற அனைத்து தன்னார்வலர்களுக்கும் திருத்தொண்டர் சந்தனசாமியும், நானும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**2. புத்தக விற்பனை:**

- மறைந்த தந்தை இக்னேசியஸ் குவான் அவர்களின் "நாங்கள் நினைவில் கொள்கிறோம், நாங்கள் கொண்டாடுகிறோம், நாங்கள் நம்புகிறோம்" என்ற திருப்பலி புத்தகம் விற்பனைக்கு உள்ளது. ஒரு புத்தகம் ரிம 65/-
- அன்றாட அருள் வாக்கு (விவிலிய புத்தகம்) 2019 (ஆ, த) விற்பனைக்கு உள்ளது. ஒரு புத்தகம் ரிம 20/-
- ஞாயிறு திருப்பலிகளுக்கு பிறகு பங்கு மண்டபத்தில் வாங்கிக் கொள்ளலாம்.

**3. பொது வேலையாள்**: 2 பொது வேலையாட்களை நாங்கள் தேடுகின்றோம். ஆலயத்தில் பணிபுரிய ஆண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நீங்கள் ஒரு பகுதி நேர அல்லது முழு நேர ஊழியராக வேலை செய்யலாம். தயவு செய்து மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**4. 2019க்கான நாள்காட்டி**: 2019க்கான நாள்காட்டி தயாராக உள்ளது. டிச 23ஆம் தேதியிலிருந்து அதிச தலைவர்கள் **பங்கு இல்லத்தில் (வாகனம் நிறுத்துமிடம்)** பெற்றுக்கொள்ளலாம்.

**5. பதிகு:** 10 ஜன 2019 இரவு 8.00க்கு பெர். மை 1-2ல் பங்கு திருவழிபாட்டு குழுவுடன் சந்திப்பு (முன்னோன் தயாரிப்பாளர்கள், முன்னோன் & வாசகர், உபசரிப்பு குழு, நற்கருணை பணியாளர், பீடச்சிறுவர்கள் & பாடல்குழு ஆ,த)

**6. புனிதத்தன்மையும் இரகசியத் தன்மையும்:** குருவானவர்களுடன் அனைத்து தனிப்பட்ட சந்திப்புகள், பாவசங்கீர்த்தனம் போன்ற இவையனைத்தும் அந்தரங்கமாக கருதப்படுகிறது. எனவே புனிதமானதாகும். இந்த விவகாரத்தில் எந்த ஒரு பதிவும் அனுமதிக்கப்படாது.

**7. பொங்கல் கொண்டாட்டம் 2019**: இந்த வருடம் பொங்கல் கொண்டாட்டம் 13 ஜன 2019 (ஞாயிறு) காலை 7.00மணி திருப்பலியில் கொண்டாடப்படுகிறது. மற்றும் பங்கு வளாகத்தில் மாலை 3.00க்கு புலூமா கலாச்சாரக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் கொண்டாட்டமும் நடைபெறும். புலூமா கலாச்சாரக் குழு போர்வைகள், செயற்கை நகைகள் மற்றும் இந்தியாவிலிருந்து எடுத்து வந்த மற்ற பொருட்களும் 6 &13 ஜன 2019 (ஞாயிறு) காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு விற்பனை செய்யவுள்ளனர். இது பொங்கல் கொண்டாட்டத்திற்கு நிதி திரட்டுவதற்காக செய்யப்படுகிறது.

**8. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (ஆங்கிலம்):** நாள்: 12 ஜனவரி 2019 (சனி), நேரம்: மாலை 4.30 மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**9. புத்தாண்டு விடுமுறைகள்:** பங்கு அலுவலகம் மூடப்பட்டிருக்கும். **புத்தாண்டு:** 31 டிச (திங்) ½ நாள் ~ 1 ஜன (செவ்)

**10. கிறிஸ்துமஸ் வாழ்த்து:** மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமியும் நானும், புனித லூர்து மாதா தேவாலய பணியாளர்களுடன் இணைந்து உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்துமஸ் கொண்டாட்ட வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கிறோம். கிறிஸ்துவின் பிறப்பு நம் ஒவ்வொருவருக்கும் சமாதானம், அன்பு, மகிழ்ச்சியை அளிப்பதாக. நாம் 2019ஆம் ஆண்டை புதிய உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் வரவேற்போம்.

**11. நோயாளர்களுக்கான நற்கருணை:** அ) உங்கள் நாய்களை கட்டி போடுங்கள் ஆ) வீட்டு நோயாளர்களை முன்கூட்டியே தயார் செய்து வைத்துக்கொள்ளுங்கள். இ) நீங்கள் வீட்டில் இல்லையென்றால் நற்கருணை பணியாளர்களிடம் முன்கூட்டியே தெரிவித்துவிடுங்கள்.

**12. நற்கருணை பேழை:** நீங்கள் நற்கருணை பேழையை கடந்து செல்லும்போது தலை வணங்குங்கள் அல்லது முழங்கால் இடுங்கள். உங்கள் குழந்தைகளையும் இவ்வாறு செய்ய கற்றுக்கொடுங்கள்.

**13. புது வருட திருப்பலிகள்:**

| 31 டிச 2018<br>**(திங்கள்)** | 1 ஜன 2019<br>**(செவ்வாய்)** |
|---|---|
| மாலை 6.00 (ஆ, த)- ஆண்டு இறுதி சடங்கு இல்லை<br>மாலை 8.00 (ஆ) - ஆண்டு இறுதி சடங்கு<br>இரவு 11.00 (த) - ஆண்டு இறுதி சடங்கு | காலை 9.00 (ஆ, ம) |

**14. பங்கு மண்டப மறுசீரமைப்பு:** லூர்து மண்டபத்தை மேம்படுத்தி முழுமையாக மறுசீரமைப்பு செய்துவிட்டோம். இது திருமண வரவேற்பு, நிச்சயதார்த்தம் மற்றும் மற்ற நிகழ்ச்சிகளுக்கும் பொதுவானது. 2019க்கான பதிவுகள் இப்போதிலிருந்து தொடங்குகிறது. பதிவு செய்வதற்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**15. சந்தா உறைகள்:** சந்தா உறைகளை எடுத்து பங்கிற்கு பங்களிப்பு செய்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் 40% மக்கள் செலுத்தாமல் இருப்போர் தயவு செய்து உங்களின் வெறுமையான உறைகளை பங்கில் மீண்டும் ஒப்படைக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் விநியோகிக்கப்பட்ட பட்டியலின்படி கணக்கறிக்கை செய்ய வேண்டியுள்ளது.

**16. புது வருடத்திற்கு வாகனங்கள் நிறுத்தும் இடங்கள்:** தயவு செய்து புது வருட திருவிழிப்பு (31 டிச 2018) திருப்பலிகளுக்கு உங்கள் வாகனங்களை வெஸ்லி மெத்தடிஸ்ட் பள்ளியிலும், Caltex அருகில் உள்ள B நுழைவாயிலையும், பிலோமினா பள்ளி அருகிலுள்ள திடலையும் பயன்படுத்தலாம். **தயவு செய்து உங்களது வாகனங்களை வீட்டிற்கு முன் நிறுத்தாதீர்கள்.! ரேலா உறுப்பினர்களின் வழிமுறைகளைப் பின்பற்றவும். உங்களது சொந்த உடைமைகளை வாகனங்களில் வைக்காதீர்கள். பங்கு மற்றும் ரேலா உறுப்பினர்கள் உங்களின் அலட்சியத்திற்கு பொறுப்பேற்கமாட்டார்கள். உங்களது ஒத்துழைப்பிற்கு நன்றி!**

**17. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டட நிதி நவம்பர் 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **432,783.31** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **487,378.10** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**23/12/18 திருப்பலி வசூல்கள்: காலை 7.00 -** RM 1,055.50 **காலை 9.00 -** RM 2,267.40 **மொத்தம் 11.00 -** RM 3,322.90
**கல்லறை-** RM 1,806.60

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்